# யோசேப்பைப் போல நாம் யாவரும் தேவன் நம்மிடம் ஒப்படைப்பவைகளுக்கு பராமரிப்பாளர்களாக இருக்கிறோம்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் S3b பாடத்தை வாசிக்கவும்.

ஜெபம்: "பிதாவாகிய தேவனே, எல்லாம் உம்முடையவைகளே. எங்களிடம் இருப்பவை உம்மிடமிருந்தே வருகின்றன. எங்களிடம் இருப்பவை எல்லாவற்றையும் பராமரிக்கவும், எல்லாவற்றையும் கொண்டு உம்மை கனப்படுத்தவும் பலம் தருவீராக! ஆமென்!"

## 1. ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

ஆதியில் இருந்து இன்று வரை, தேவன் தாம் படைத்த பொருட்களை பராமரிக்கும் பொறுப்பை மக்களிடம் கொடுக்கிறார்.

பூமியை மக்கள் ஆளவேண்டும் என்பதை **ஆதி.1:26-28ல் காண்க.** கீழே உள்ள கேள்விகளுக்கு வசனத்தில் இருந்து விடைகாணவும் (பதிலை படிப்பதற்கு முன்)




a) தங்கள் நிலத்தை நிர்வாகிக்க மக்கள் யாரிடம் இருந்து அதிகாரம் பெறுகின்றனர்?

b) தங்கள் மிருகங்களை பராமரிக்கும் அதிகாரத்தை மக்கள் யாரிடம் இருந்து பெறுகின்றனர்?

c) நிலத்தையும், மிருகங்களையும் எவ்வாறு பராமரித்தார்கள் என்று கணக்கை யாரிடம் ஒப்புவிக்க வேண்டும்?

*பதில்கள்: a) தேவனிடம் இருந்து, b)தேவனிடம் இருந்து c) தேவனிடம்.*

யோசேப்பு எவ்விதம் எகிப்தின் நிலபுலன்களின் நிர்வாகி ஆனான் என்பதை **ஆதி 39:2-5**ல் காண்க.



a) பிறருடைய காரியங்களை நிர்வாகிக்கும் போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

b) அவர்களுக்காக நாம் நன்றாக நிர்வாகிக்கும் போது நம்மைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

*பதில்கள்: a) ஞானமாக நிர்வாகித்து அவர்களுக்கு ஆசீர்வாதம் கொண்டு வர வேண்டும்.*
*b) அவர்கள் நம்மை நம்புவார்கள்.*

சொத்துக்களை எவ்வாறு நிர்வாகிக்க வேண்டும் என்று இயேசு கூறினார்? **லூக் 12:42-48**

- இயேசு திரும்பி வரும்போது நல்ல ஊழியக்காரனுக்கு எவ்வாறு பலன் அளிப்பார்? *(42-44).*
- தங்கள் சொத்துக்களினால் இயேசுவுக்குக் கீழ்ப்படியாதவர்களை இயேசு எவ்வாறு நடத்துவார்? *(45-47).*
- அதிகமாக சொத்து வைத்திருப்பவர்களிடம் இருந்து இயேசு என்ன எதிர்பார்க்கிறார்? *(48)*

தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனைப் பற்றி அவர் என்ன கூறுகிறார் என்பதை **1 கொரி. 4:1-4** ல் காண்க:

- உக்கிராணக்காரர்களாகிய நாம் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

  *(பதில்: நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும்).*
- உக்கிராணக்காரர்களாகிய நம்மை ஆராய்கிறவர் யார்?

  *(பதில்: பிறர், நீதிமன்றங்கள், கர்த்தர்).*

நமது உடலை எவ்வாறு பேண வேண்டும் என்பதை 1 தெச. 4:1-8 ல் காண்க:

- நமது சரீரத்தின் மீது யாருக்கு அதிகாரம் உண்டு? *(1 & 2).*
- இந்த உலக வாழ்க்கையில் நாம் நமது உடலை எவ்வாறு உபயோகிக்க வேண்டும்? *(3-5)*
- நமது சரீரத்தைக் கொண்டு பிறரை ஏமாற்றினால் கர்த்தர் என்ன செய்வார்? *(6)*
- நமது சரீரத்தைப் பேணத்தக்கதாக தேவன் நமக்கு என்ன தருகிறார்? *(7 & 8)*

உங்கள் ஆவிக்குரிய வரங்களை எவ்வாறு உபயோகிப்பது என்பதை 1 பேது. 4:10-11 ல் காண்க.

- தேவனிடத்தில் இருந்து நம்மில் யார் ஆவிக்குரிய வரத்தைப் பெற்றிருக்கிறோம்? *(பதில்: எல்லோருமே)*
- ஆவிக்குரிய வரங்களின் இரு வகைகளின் பயன் என்ன? *(பதில்: தேவனுக்காக பேசுதல், சேவை செய்தல்)*
- நமது ஆவிக்குரிய வரங்களை உபயோகிக்கும் பலத்தை யாரிடம் இருந்து பெற்றுக் கொள்கிறோம்? *(தேவனிடம் இருந்து)*
- நாம் நமது ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தும் போது, யாருக்கு மகிமை உண்டாகும்? *(இயேசு கிறிஸ்து)*

## 2. இந்த வாரத்து நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்.

எவ்வாறு நீங்களும் அவர்களும் நல்ல முறையில் நிர்வாகிக்கிறீர்கள் என்பதைக் குறித்து பேசுங்கள் 1) உங்கள் உடமைகள் 2) பிறருடைய உடமைகள் 3) தேவ சத்தியம் 4) உங்கள் சரீரங்கள் 5) உங்கள் ஆவிக்குரிய வரங்கள்.

இவற்றை சிறந்த முறையில் எவ்வாறு நிர்வாகம் செய்ய முடிகிறது என்பதை ஒவ்வொவரும் கூறவும்.

இந்தக் காரியங்களில் மிகவும் உண்மை உள்ளவர்களாய் இருக்க உதவுமாறு ஒன்றாகக் கூடி ஜெபியுங்கள்.

சிறந்த உக்கிராணக்காரர்கள் ஆகவேண்டிய விசுவாசிகளை சந்திக்கவும்.

- மேலே பார்த்தபடியான சில வேத வசனங்களை வாசிக்கவும்.
- விசுவாசிகளுடன் சேர்ந்து உண்மையாக இருக்க தேவன் உதவும்படி ஜெபியுங்கள்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

மேலே மேற்கோள் காட்டியவாறு உக்கிராணத்துவத்தைப் (Stewardship) பற்றி பேசும் வேத வசனங்களை வாசித்து **விளக்கமளிக்கவும்.**

உக்கிராணத்துவத்தைப் பற்றிய கீழ்வரும் உண்மைகளை **விளக்குக:**

- எல்லா நல்ல விஷயங்களையும் படைத்த அதன் சொந்தக்காரர் தேவனே.
- ஒவ்வொரு மனிதனிடமும் தேவன் பல விஷயங்களை ஒப்படைக்கிறார் (வாழ்க்கை, உடல், நிலம், மிருகங்கள், உடைமைகள், வேலைகள், துணைகள், குழந்தைகள், அறிவு, பணம், வேதாகமம், ஆவிக்குரிய வரங்கள் போன்றவை).
- அவர் கொடுத்த வாக்குத்தத்தின் படியே தேவன் மிகவும் உண்மையுள்ளவர்.
- அவர் நம்மிடம் ஒப்படைத்த எல்லாவற்றிலும் நாம் உண்மை உள்ளவர்களாய் இருக்கும்படி உதவ தேவன் விரும்புகிறார்.
- ஒவ்வொருவரும் எவ்வளவுக்கு எவ்வளவு உண்மை உள்ளவர்கள் என்று தேவன் நியாயம் தீர்ப்பார்.
- தன்னுடைய சரீரத்தால் மற்றவர்களை ஏமாற்றும் எல்லோரையும் தேவன் தண்டிப்பார்.
- தங்களுக்கு உண்டான எல்லாவற்றிலும் உண்மை உள்ளவர்களாய் இருக்கும் எல்லோருக்கும் தேவன் பலன் அளிப்பார்.

ஒரு நல்ல பராமரிப்பாளனாக இருக்க தேவன் எவ்வாறு உதவிக் கொண்டு வருகிறார் என்பதைக் **கூறவும்.**

ஒரு சிறந்த பராமரிப்பாளனாக இருக்க தேவன் எவ்வாறு உதவுகிறார் என்பதைக் கூற விசுவாசிகளை **அழையுங்கள்.** *அவர்கள் சொல்லுவதைக் கேட்க காத்திருங்கள். கீழ்வருபவைகளை அவர்கள் குறிப்பிடவில்லை என்றால் நீங்கள் கூறுங்கள்.*

### தமது ஊழியக்காரர்களாகிய நம்மிடம் தேவன் ஒப்படைத்துள்ள விஷயங்கள்

**நமது உடல்கள் :** இதை நாம் போஷித்து பாதுகாத்து, புனிதமாக வைத்திருக்க வேண்டும்.

**நமது நிலங்கள்:** இதை நாம் உபயோகித்து தேய்விலிருந்து காக்க வேண்டும்.

**நமது மிருகங்கள்:** நாம் வாழ இவற்றை பயன்படுத்தி இரக்கமுடன் நடத்த வேண்டும்.

**நமது பணம்:** நமது தேவைகளையும் பிறருடைய தேவைகளையும் சந்திப்பதற்காக.

**நமது குழந்தைகள்:** இவர்களை நாம் பேணிக்காத்து சுவிசேஷத்தைச் சொல்லி கொடுக்கவேண்டும்.

**நமது பெற்றோர்கள்:** கனப்படுத்தி கவனித்துக் கொள்ள வேண்டும்

**நமது வீடும், உடமைகளும்:** தேவைப்படும் போது நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**நமது ஆவிக்குரிய வரங்கள்:** இவற்றைக் கொண்டு நாம் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்ய வேண்டும்.

**நமது அறிவு:** தேவைப்பட்டவர்களுக்கு போதிக்க வேண்டியது.

**நமது விசுவாசம் :** இயேசுவினிடத்தில் உள்ள நமது விசுவாசத்தை தினமும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

நீங்கள் சொல்லக் கூடிய வேறு விஷயங்கள் உள்ளனவா?

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்த நாடகம், கேள்வி ஆகியவற்றை வழங்கலாம்.

2 நாளா. 35:15-19 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தி**யை ஆசரிக்கவும். தேவ மக்கள் மறந்து விட்ட கர்த்தரின் பஸ்கா பண்டிகையை ஆசரிக்க வைத்த நல்ல அரசன் யோசியாவைப் பற்றி விளக்கவும்.

**மனனவசனம்:** (இணைந்து) 1 கொரி. 4:2, "உக்கிராணக்காரன் உண்மை உள்ளவன் என்று காணப்படுவது அவனுக்கு அவசியம்."

விசுவாசிகள்/விருந்தாளிகள் இரண்டு மூன்று பேர் அடங்கிய சிறு **குழுக்களாக** அமரட்டும். தேவைகளை அறிக்கையிட்டு, நல்ல பராமரிப்பாளர்களாக இருக்கும் தங்கள் எண்ணத்தை வெளியிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net